தி இந்து 17/01/2020

# கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்க அழைப்பு

■ கோவை

மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் கு.ராசாமணி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பட்டியலிடப்பட்ட மத்திய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்தியப் பல்கலைக்கழகங்களில் பயிலும், தமிழகத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள கல்வி நிலையங்களில் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையாக ஆண்டுக்கு ரூ.2 லட்சம் வரை தமிழக அரசு வழங்குகிறது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.